DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 1/2018**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : சண்முகம்
Father/ Husband Name : சோனை முத்து
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 01.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தாழையூரில் குடியிருந்து கட்டுமானத் தொழில் செய்கிறேன். புகார்தாரர் மற்றும் அ.சா.1 எனக்கு தெரியும். அவர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர். புகார்தாரர் தற்போது சிங்கப்பூரில் இருக்கிறார். கடந்த 01.06.2016-ம் தேதி சண்முகராஜாவும், அ.சா.1வும் உறவினர்களின் காதுகுத்துக்கு சென்றார்கள். பிறகு 2 நாட்கள் கழித்து 03.06.2016-ல் திரும்ப வந்தார்கள். அன்று காலை 10.00 மணியளவில் அவரது வீட்டில் ஒரே சத்தமாக இருந்தது. அதை நான் போய் பார்த்தேன் அவரது வீடு திறந்து இருந்தது. அவரது பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் இருந்த வெள்ளி சாமான்களை காணவில்லை என்று சொன்னார்கள். அதன் பிறகு போலீசில் புகார் கொடுத்துள்ளேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. கடந்த 03.06.2016ம் தேதியன்று புகார்தாரரும், அ.சா.1வும் வீட்டிற்கு திரும்ப வந்து சத்தம் போட்டதன் அடிப்படையில் எனக்கு சம்பவம் பற்றி தெரியுமென்றால் சரிதான். என்வீடு புகார்தாரர் வீட்டிற்கு எதிரே உள்ளது. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** **இல்லை.**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.